# IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

## OS. No. 202/2021

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
| NAME | வினோத்குமார் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 01.04.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என தெரியுமா என்றால் பரிகாரம் தெரியாது அவரிடம் நான் பணம் வாங்கியதாக வழக்கு போட்டுள்ளார். பதில் என்ன போட்டுள்ளேன் என தெரியும். வாதி என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என எனக்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டை நான் கண்ணால் பார்த்துள்ளேன். எப்போது தாவா கடனுறுதி சீட்டை பார்த்தேன் என்றால் நான் பதிலுரை தாக்கல் செய்தபிறகு பார்த்தேன்.

2. நீதிமன்றத்தில் இருந்து பார்த்தேனா என்றால் இல்லை கடனுறுதி சீட்டின் நகலை எனது வழக்கறிஞர் காட்டினார் அதை பார்த்து அதிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என தெரிந்து கொண்டேன். அதில் மா.விவேகானந்தன் என்பவரும் சண்முகம் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டிருந்ததாக பார்த்தேன். முதல் சாட்சியாக சண்முகம் கையெழுத்து போட்டிருந்தார், இரண்டாவது சாட்சியாக மா.விவேகானந்தன் கையெழுத்து போட்டிருந்தார்.

3. இன்றிலிருந்து எத்தனை நாட்களுக்கு முன்பு சாட்சி கையெழுத்து போட்டவர்கள் பற்றி பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு இருக்கும். நான் பி.ஈ.சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக படிப்பேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு தான் நான் பார்த்ததாக சொல்வது என்றால் சரிதான். இரண்டாவது சாட்சி கையெழுத்து தமிழா அல்லது ஆங்கிலமா என்றால் தமிழில் தான் உள்ளது. அந்த எழுத்துக்கள் தெரிகிறதா என்றால் மா மட்டும் தெரிகிறது மற்றவை தெரியவில்லை. இரண்டாவது சாட்சி கையெழுத்தை என்னால் யார் பெயர் என படித்து பார்த்து சொல்ல

முடியுமா என்றால் முடியாது. கடனுறுதி சீட்டை நான் எழுதிகொடுத்தபோது எனக்கு வேண்டப்பட்ட நபர் தான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்துபோட்ட காரணத்தினால் தான் அவர் விவேகானந்தன் என நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 07.04.2021–ல் அதை நான் வாங்கினேன் என்றால் முகவரி தவறாக இருந்தது செல்போன் எண் இருந்ததால் தபால்காரர் நீதிமன்றத்தில் இருந்து கடிதம் வந்துள்ளது என அழைத்து நான் வந்து வாங்கிக்கொண்டேன். அந்த அறிவிப்பில் என்ன உள்ளது என நான் படித்து பார்த்தேன். அந்த அறிவிப்பில் என்ன இருந்தது என்றால் 2019–ல் நான் 50,000/– ஏகாம்பரத்திடம் கடன் வாங்கி கொடுக்கவில்லை என்றும் அதற்கு 2 சதவீதம் வட்டியோடு 75,000/– சில்லறை கொடுக்க வேண்டும் என இருந்தது.

5. அறிவிப்பு பெற்றபிறகு ஏகாம்பரத்திடம் அதுகுறித்து கேட்டேனா என்றால் இல்லை. அறிவிப்பு பெற்றபிறகு அதிலுள்ள விவரங்கள் தவறாக இருந்தால் அதிர்ச்சியாகி பதில் கொடுத்திருப்பேன் என்றால் அறிவிப்பு கிடைத்தவுடன் நான் வாதி வழக்கறிஞருக்கு போன் செய்து கேட்டபோது அவர் நேரில் வர சொன்னதால் அவரது அலுவலகத்திற்கு சென்று கேட்டபோது மா.விவேகானந்தன் என்பவர்க்காக அறிவிப்பு கொடுத்ததாக சொன்னார் மா.விவேகானந்தன் எனது நண்பர் தமிழ்செல்வனிடம் விசாரித்தபோது மா.விவேகானந்தன் தி.மு.க நகர செயலாளர் என்றும் அவர் இதுபோல் வளர்ந்து வரும் நபர்களிடம் பணம் பறிக்க வேண்டி மோசடியாக வழக்கு போடுவார் என சொன்னதால் வழக்கை பார்த்துக்கொள்ளலாம் என நான் இருந்துவிட்டேன்.

6. தற்போது விவேகானந்தனின் கையெழுத்தை தெரியாமல் ஒப்புகொண்ட காரணத்தினால் தவறான காரணங்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் உண்மையாக இருந்திருந்தால் பதிலுரையில் சொல்லியிருப்பேன் என்றாலும் உண்மையில்லாத காரணத்தினால் பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, விவேகானந்தன் என்னை மிரட்டி கூட உள்ளார் ஆனால் அந்த விவரங்களை பதிலில் போடவில்லை.

7. எப்போது விவேகானந்தன் மிரட்டினார் என்றால் வழக்கு போட்டபிறகு 10 மாதம் கழித்து மிரட்டினார். விவேகானந்தன் மிரட்டிய விவரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வந்தபிறகு அது தவறானது என்றும் மோசடியானது என்றும் பதில் அறிவிப்பு ஏதாவது கொடுத்தேனா என்றால் எனது வழக்கறிஞரை பார்த்து

பேசினேன் அவர் பதில் கொடுத்துவிட்டதாக சொன்னார். எனது வழக்கறிஞர் என்ன பதில் அறிவிப்பு கொடுத்தார் என பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த பதிலில் என்ன போடப்பட்டிருந்தது என்றால் கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் முகவரி மாற்றி அனுப்பியதால் குழப்பம் அடைந்துவிட்டதாகவும் போடப்பட்டிருந்தது.

8. நான் முதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தபோது மேற்படி பதில் அறிவிப்பை போடவில்லை என்றால் எனது வழக்கறிஞர் தான் அனுப்பினார், எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் பதில் அறிவிப்பு கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. விவேகானந்தன் என்னை மிரட்டினார் என்ற விவரத்தையும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், தற்போது தான் முதல்முறையாக சொல்கிறேன்.

9. உண்மையில் விவேகானந்தன் என்னை மிரட்டி இருந்தால் என் வழக்கறிஞரிடம் சொல்லி அவர் குறுக்கு விசாரணை செய்தபோது கேட்டிருப்பார் என்றாலும் அதுபோல் மிரட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் எனது செல்போன் எண்ணாக சொல்லியுள்ளது என்னுடையது தானா என்றால் ஆமாம் தற்போது உபயோகத்தில் இல்லை. அது எப்போதில் இருந்து உபயோகத்தில் இல்லை என்றால் 2021 கடைசி மாதம் நவம்பர் அல்லது டிசம்பரில் திருப்பதியில் தொலைந்துவிட்டது. அந்த எண்ணை மீண்டும் வாங்கவில்லையா என்றால் அது மேகநாதன் என்பவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது அதனால் வாங்கவில்லை.

10. அம்மன் அரிசி மண்டி என்ற முகவரி தவறு என்றும் அன்னை அரிசி மண்டி தான் சரியான முகவரி என்றும் குறிப்பிட்டு பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையான நபர் இல்லை என்றாலும் அதனால் தான் என் செல்போன் எண் வேறு ஒருவருடையது என்றும் அம்மன் அரிசி மண்டி தவறானது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் வாதியிடம் கடன் வாங்காமல் இருந்தால் அறிவிப்பு கிடைத்தவுடன் பதில் அறிவிப்பு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல, அதனால் தான் நேரில் விசாரித்தேன். அறிவிப்பு கிடைத்தவுடன் விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் விசாரித்தபிறகும் அறிவிப்பு பொய்யானது என பதில் கொடுக்கவில்லை என்றால் நான் வழக்கிற்கு நேரடியாக வந்துவிட்டேன் வாய்தா அன்று தான் எனது வழக்கறிஞரை பார்த்தேன்.

11. நீதிமன்றத்தில் இருந்து சம்மன் கொண்டு வந்தார்களா என்றால் கொண்டு வந்தார்கள். அதில் என்ன முகவரி இருந்தது என்றால் அம்மன் அரிசி மண்டி, 52 மேல்பட்டி ரோடு, காமாட்சிபேட்டை என்று இருந்தது. அமீனாவிடம் முகவரி தவறு அரிசி மண்டி பெயரும் தவறு என சொன்னேனா என்றால் சொன்னேன் அவர் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொன்னார். நான் சொல்வது தவறு என்றாலும் முகவரி தவறாக இருந்தால் நீதிமன்ற ஊழியர் சம்மன் சார்வு செய்யமாட்டார் என்றால் பெயர் மற்றும் செல்போன் எண் வைத்து அழைத்தார்கள்.

12. 2022 வருட பிறப்புக்கு முன் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு எனது செல்போன் திருப்பதியில் தொலைந்தது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் படித்ததால் பல மாதிரிகளில் கையெழுத்து போடுவது வழக்கம் என்றாலும் அதுபோல் தாவா கடனுறுதி சீட்டிலும் மாற்றி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் பணம் கொடுத்துதான் தாவா கடனுறுதி சீட்டில் என்னிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல, ஏகாம்பரம் யார் என்று எனக்கு தெரியாது. தெரியாத நபர் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் வாதிக்கு இல்லை என்றாலும் நான் தான் பணத்தை ஏமாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. கையெழுத்து என்னுடையது இல்லை என நிரூபிக்க எனக்கு வாய்ப்புகள் நிறைய இருந்தும் அதை நான் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்துவிட்டேன். என்னிடம் அனைத்து ஆவணங்களும் இருந்தும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள கடனுறுதி சீட்டை நான் பார்க்காமல் அதை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி சாட்சிகள் முன்னிலையில் பணம் கொடுத்து நான் அதை பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டை எழுதிகொடுத்து கையெழுத்து போட்டபின் நான் வாதியிடம் பெற்ற கடனை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.